தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## "யானைகளின் ஊடுருவலை தடுக்க மேய்ச்சல் நிலங்களை அதிகப்படுத்த வேண்டும்'

**மேட்டுப்பாளையம்,**

குடியிருப்பு, விளை நிலங்களில் யானைகளின் ஊடுருவலைத் தடுக்க மேய்ச்சல் நிலங்களை அதிகப்படுத்துவதே சிறந்த தீர்வாக அமையும் என்று கோவை மாவட்ட வன அலுவலர் செந்தில்குமார் தெரிவித்தார்.

மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், பெரிய பாலூட்டிகளின் வலசை எனும் ஒருநாள் பயிற்சி முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது.

வன உயிரியல் துறைத் தலைவர் ரேவதி வரவேற்றார். முகாமை துவக்கி வைத்து வனக்கல்லூரி முதல்வர் துரைராசு பேசியது:

அண்மை காலமாக யானை-மனித மோதல் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இந்த மோதலை தடுப்பது குறித்து நடைபெறும் இந்த பயிற்சி முகாமில், யானைகள் நடமாட்டம் குறித்த தகவல் சேகரிப்பு முறைகள், விவசாய நிலங்களில் யானைகளின் பாதிப்பை அறிதல், யானைகள் மனிதப் பகுதியில் நுழையும் வழிகளை கண்டறிந்து தடுக்கும் வழிமுறைகள், மனித-விலங்கு மோதலின் முக்கிய காரணம் மற்றும் அதை தடுக்கும் முறைகள் குறித்து வன உயிரின ஆராய்ச்சியாளர்கள் மற்றும் வல்லுநர்கள் சார்பில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன என்றார். முகாமில், கோவை மாவட்ட வன அலுவலர் செந்தில்குமார் பேசியது:

வனப்பகுதியில் உள்ள யானை, மான், முயல் உள்பட வன விலங்குகளுக்கு மேய்ச்சல் நிலம் மிக அவசியமானதாகும். வனப்பகுதி மேய்ச்சல் நிலங்களில் ஆடு, மாடுகளை மேய்ப்பதால் வன விலங்குகளுக்கு உணவு பற்றாக்குறை ஏற்படுகிறது.

அதனால் யானைகள் வன எல்லையோரப் பகுதிகளில் உள்ள விளை நிலங்களில் அடிக்கடி புகுந்து சேதங்களை ஏற்படுத்துகின்றன.

இதைத் தடுக்க வனப்பகுதிகளில் ஆடு, மாடுகளை மேய்க்க தடை விதிப்பதுடன், அவற்றின் உணவுத் தேவையை தீர்க்க, அதிக பரப்பளவில் மேய்ச்சல் நிலங்களை உருவாக்குவது சிறந்த தீர்வாக அமையும் என்றார். வன உயிரின ஆராய்ச்சியாளர்கள் அஜய் தேசாய், வனத்துறை மருத்துவர் மனோகரன், மோகன்ராஜ், சிவசுப்பிரமணியம் ஆகியோர் பயிற்சிகளை வழங்கினர். இதில், கோவை, ஈரோடு, ஒசூர், நீலகிரி, தர்மபுரி, திண்டுக்கல், திருநெல்வேலி, சத்தியமங்கலம், மேகமலை, ஸ்ரீவில்லிபுத்தூர் வனக்கோட்டங்களைச் சேர்ந்த வனச்சரக அலுவலர்களும், வனவர்களும் கலந்து கொண்டனர். வன உயிரியல்துறை உதவி பேராசிரியர் பரணிதரன் நன்றி கூறினார்.

## கறிக்கோழி கொள்முதல் விலையில் மாற்றம் இல்லை

**பல்லடம்,**

திருப்பூர் மாவட்டம், பல்லடத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பி.சி.சி. (பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது. ஞாயிற்றுக்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.58 ஆக இருந்தது. விற்பனையில் மாற்றம் எதுவும் இல்லாததால் திங்கள்கிழமையும் அதே விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டைக் கோழி கிலோ ரூ.42. முட்டை விலை: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.2.70, சென்னையில் ரூ.3.15.

## மேட்டூர் அணைக்கு நீர் வரத்து அதிகரிப்பு

**மேட்டூர்,**

மேட்டூர் அணைக்கு வரும் நீர்வரத்து திங்கள்கிழமை நொடிக்கு 1,251 கன அடியாக அதிகரித்தது. காவிரி ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை இல்லாததால் மேட்டூர் அணைக்கு நொடிக்கு 500 கன அடி தண்ணீர் மட்டுமே

வந்துகொண்டிருந்தது. இந்த நிலையில், திங்கள்கிழமை திடீரென அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 1,251 கன அடியாக அதிகரித்தது.

நீர்வரத்து அதிகரிக்கப்பட்டதற்கான காரணம் தெரியவில்லை என்று பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

திங்கள்கிழமை காலை நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 48.87 அடியாக இருந்தது. குடிநீர்த் தேவைக்கு அணையில் இருந்து திறந்துவிடப்படும் தண்ணீர் அளவு நொடிக்கு 600 கன அடியில் இருந்து 1000 கன அடியாக அதிகரிக்கப்பட்டது. அணையின் நீர் இருப்பு 17.10 டி.எம்.சி.யாக இருந்தது.

**கேரளத்துக்குச் செல்லும் நெல்லை வைக்கோல்**

**திருநெல்வேலி,**

திருநெல்வேலியில் பிசான பருவ அறுவடை தீவிரமடைந்துள்ளதையடுத்து, கேரளம் உள்ளிட்ட பகுதிகளுக்கு வைக்கோலை வியாபாரிகள் வாங்கிச் செல்வது அதிகரித்துள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் நிகழ் பிசான பருவத்தில் சுமார் 40 ஆயிரம் ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டது. அம்பை 16, ஆடுதுறை 45, டீலக்ஸ் பொன்னி, கர்நாடகா பொன்னி போன்ற நெல் ரகங்கள் நடவு செய்யப்பட்டு இறுதிக்கட்ட அறுவடைப் பணிகள் தீவிரமடைந்துள்ளன. பாளையங்கோட்டை, திருநெல்வேலி பகுதிகளில் அறுவடை மட்டுமன்றி அதனுடன் வைக்கோலை பத்திரப்படுத்தும் பணியிலும் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

தமிழகத்தில் கால்நடைகள் பெருக்கத்துக்கு ஏற்ப கால்நடை தீவன உற்பத்தி இல்லை. குறிப்பாக, வைக்கோல் உற்பத்தி கடந்த 15 ஆண்டுகளை ஒப்பிடுகையில் பாதியாகக் குறைந்துவிட்டது. 8 சென்ட் பரப்பிலான வயலில் நெல் சாகுபடி செய்யும்போது 2 பெரியகட்டு வைக்கோல் கிடைத்துவந்தது. ஆனால், இப்போது முழுவதும் இயந்திரங்களைக் கொண்டு அறுவடைப் பணிகள் செய்யப்படுவதால் நெற்பயிரின் மேல்பகுதியை வெட்டி எடுப்பதிலேயே அக்கறை செலுத்துகின்றனர். இதனால், ஏற்கெனவே கிடைத்ததில் இருந்து பாதியளவே வைக்கோல் கிடைக்கிறது. பருவமழை சரிவர பெய்யாமல் பல்வேறு பகுதிகளிலும் வறட்சி நிலவுவதால் வைக்கோலுக்கான தேவை அதிகரித்துள்ளது. இதுகுறித்து

பாளைங்கால்வாய் பகிர்மானக் குழு உறுப்பினர் கணேசன் கூறியதாவது: நெல் சாகுபடியின்போது நாற்றுபாவுதல், நடவுப்பணிகளின்போது கால்நடைகளைக் கொண்டு இலவசமாக உழவுப்பணிகளைச் செய்து கொடுத்து அதற்கான கட்டணத்தை அறுவடைக்கு பின்பு வைக்கோலாகப் பெற்றுக்கொள்ளும் பழக்கம்தான் தமிழகத்தில் இருந்து வந்தது. அதன்பின்பு வயல்கள் வைத்திருப்போர் கால்நடை வளர்ப்பை குறைத்த பின்புதான் பிற பகுதிகளுக்கு விற்பனைக்காக வைக்கோல் அனுப்பப்பட்டது. இப்போது வைக்கோல் விற்பனை பெரும் வியாபாரமாக வளர்ந்துவிட்டது. அறுவடை நடைபெறும் பகுதிகளில் இருந்து வைக்கோலை ஒரு கட்டு ரூ.100 முதல் ரூ.150 வரை பெற்றுக்கொண்டு, வறட்சிப் பகுதிகளில் அதனை ரூ.200 முதல் ரூ.400 வரை பல்வேறு விலைகளில் விற்கிறார்கள். திருநெல்வேலி, பாளையங்கோட்டை பகுதிகளில் இருந்து சங்கரன்கோவில், கழுகுமலை பகுதிகளுக்கு மட்டுமன்றி கேரளத்துக்கும் அதிகளவில் வைக்கோல் கொண்டுசெல்லப்படுகிறது. இந்த ஆண்டு பிசான பருவத்தில் திருநெல்வேலி மாவட்ட கால்வாய் பாசனப் பகுதிகள் அனைத்திலும் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளதால், ஏற்கெனவே பருவமழை பொய்த்த காலங்களில் இருந்ததுபோன்ற வைக்கோல் தட்டுப்பாடு ஏற்படாது. ஏற்கெனவே வைக்கோல் தட்டுப்பாடு ஏற்பட்டபோது மானாவாரி பகுதிகளில் பயிரிடப்பட்ட சோளத்தட்டை உள்ளிட்டவற்றைக் கொண்டே கால்நடை வளர்ப்போர் சமாளித்தனர். தமிழகத்தில் கால்நடை வளர்ப்போருக்கு பெரும் சவாலாக உள்ள கால்நடைத் தீவன உற்பத்தியைப் பெருக்க தமிழக அரசு நடவடிக்கைகளை அதிகப்படுத்த வேண்டும் என்றார்.

## கரும்பு விவசாயிகளுக்கு கடன்:உயர்நீதிமன்றத்தில் வங்கி அதிகாரி தகவல்

**மதுரை,**

கரும்பு விவசாயிகளுக்கு கடன் வழங்க வங்கிக் கிளைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் வங்கியின் உயர் அதிகாரி தெரிவித்துள்ளார். அலங்காநல்லூர் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கரும்பு வழங்கும் விவசாயிகளுக்கு திருவாதவூரில் உள்ள வங்கிக்கிளையில் கடன் வழங்க மறுப்பதாக தமயந்தி என்பவர் உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

மனுவை விசாரித்த நீதிபதிகள் வி.ராமசுப்பிரமணியன், வி.எம்.வேலுமணி ஆகியோர் அடங்கிய அமர்வு மனுவுக்கு பதிலளிக்குமாறு வங்கிக்கிளை மேலாளர் உள்ளிட்டோருக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டது. இ0ந்நிலையில் வங்கியின் மதுரை மண்டல மேலாளர் அலுவலகத்தில் இருந்து வங்கிக் கிளைகளுக்கு அனுப்பிய சுற்றறிக்கை அரசுத்தரப்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அதில், அப்பன்திருப்பதி, கடச்சனேந்தல், கருமாத்தூர், மேலூர், திருவாதவூர், வரிச்சியூர், ஏ.வல்லாளபட்டி, சத்திரப்பட்டி கிளைகளில் கடன் நிலுவை இல்லாத கரும்பு விவசாயிகளுக்கு கடன் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள் மனு மீதான விசாரணையை முடித்துவைத்தனர்.

## பாலாறு பொருந்தலாறு அணையில் மீன் பிடித்தல் துவக்கம்

**பழனி,**

பழனி அருகே பாலாறு பொருந்தலாறு அணையில் வரும் ஏப்.1ஆம் தேதி முதல் திலேப்பியா மீன் பிடித்தல் துவங்கப்படவுள்ளது.

பழனியை அடுத்த மேற்கு தொடர்ச்சி மலைத் அடிவாரத்தில் அமைந்துள்ளது பாலாறு பொருந்தலாறு அணை. திண்டுக்கல் மாவட்டத்தின் மிகப்பெரிய அணையான இங்கிருந்து பல ஆயிரம் ஏக்கருக்கு பாசனத்துக்கான தண்ணீர் வினியோகம் செய்யப்படுவதோடு, பழனி நகருக்கும் போதிய அளவு குடிநீர் வினியோகம் செய்யப்படுகிறது.

தற்போது பருவமழை பொய்த்ததன் காரணமாக அணைக்கு நீர்வரத்து குறைந்து தண்ணீரின் உயரமும் குறைந்துள்ளது. இந்த அணையின் உட்பகுதியில் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் சார்பில் மீன்குஞ்சுகள் விடப்பட்டு வளர்ந்தபின் பிடிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

தினமும் காலையில் புத்தம் புதிதாக பிடிக்கப்படும் மீன்களை வாங்க ஏராளமான பொதுமக்கள் இங்கு குவிகின்றனர். பொதுமக்களுக்கு வினியோகம் செய்யப்பட்டது போக மீதி மீன்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் விற்பனை செய்யப்படுகிறது. தற்போது அணையில் கட்லா, ரோகு, மிருகால் போன்ற மீன்கள் வளர்க்கப்பட்டு வருகிறது. இவை ஒரு வருட காலத்தில் சுமார்

ஒன்றரை கிலோவுக்கு மேல் வளர்ந்து விடும் நிலையில் வலை விரிக்கப்பட்டு பரிசல்கள் மூலம் பிடிக்கப்பட்டு கரைக்கு கொண்டு வரப்படுகிறது.

இவை தவிர அணையில் இயற்கையாக வளரும் திலேப்பியா மீன்களும் அவ்வப்போது பிடிக்கப்படுகிறது. இதுகுறித்து மீன்வளர்ச்சிக் கழக மேலாளர் பாண்டியன் கூறுகையில், தற்போது தண்ணீர் அளவு குறைவாக உள்ளதால் மீன்வளர்ச்சி குறைவாகவே உள்ளது. தினமும் சுமார் ஐநூறு கிலோ முதல் அறுநூறு கிலோ வரை பிடிக்கப்பட்டு தரம் பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது என தெரிவித்தார்.

ஒப்பந்தகாரர் செந்தில்குமார் கூறுகையில், தற்போது முன்பு கட்லா, ரோகு, மிருகால் ரக மீன்கள் பிடிக்கப்பட்டு வருகிறது. இதன் வரத்து வரும் வாரம் வரை இருக்கும். அதன்பின் அணையில் குஞ்சுகள் வளர காலஅவகாசம் விடப்படும். அப்போது திலேப்பியா ரக மீன்கள் பிடிக்கப்படும். திலேப்பியா கிலோ ரூ.60க்கும், மற்றவை கிலோ ரூ.130க்கும் விற்பனை செய்யப்படுவதால் விலை குறைவான திலேப்பியாவுக்கு மக்களிடையே அதிக வரவேற்பு இருக்கும். அதன்படி வரும் ஏப்.1ம் தேதி முதல் திலேப்பியா மீன்கள் பிடிக்கும் பணி துவங்கவுள்ளது என தெரிவித்தார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## பயிர்களை பாதுகாக்க புதிய முறை கண்டுபிடிப்பு

**மெல்போர்ன்**: பூச்சிகளின் பாலினத்தை மாற்றுவதன் மூலம், பயிர்களை அழிக்கும் பூச்சிகளை, கட்டுப்படுத்த முடியும் என, விஞ்ஞானிகள் கண்டுபிடித்து உள்ளனர்.

ஆஸ்திரேலியாவில் அமைக்கப்பட்டு உள்ள, தோட்டக்கலை துறைக்கு சொந்தமான, குயின்ஸ்லேண்ட் பழப்பண்ணைகளில், ஒருவித பூச்சியினம், பெரும் அழிவை ஏற்படுத்தி வருகிறது. இதனால், தோட்டத் துறைக்கு, 700 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டு உள்ளது. 8 மி.மீ., நீளமுள்ள, 'கியூ - பிளை' என்ற பூச்சிகள், பழங்கள், காய்கறிகளை வேகமாக அழிக்க வல்லவை. இந்த பூச்சியினத்தை

கட்டுப்படுத்தவும், அழிக்கவும், அந்நாட்டு அரசு முயன்று வருகிறது. காமன்வெல்த் அறிவியல் மற்றும் தொழில் ஆய்வு நிறுவனத்தைச் (சி.எஸ்.ஐ.ஆர்.ஓ.,) சேர்ந்த விஞ்ஞானிகள், மலட்டு பூச்சி தொழில் நுட்பத்தின் மூலம், பயிர்களை அழிக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்த முடியும் என்பதை கண்டறிந்து உள்ளனர். குறிப்பிட்ட பூச்சியினங்களின் பாலினத்தை, ஆணாக மாற்றுவதால், அவற்றின் இனப்பெருக்கம் கட்டுப்படுத்தப்படும். பின், அந்த பூச்சிகளின் கூடுகளைக் அழிப்பதன் மூலம், முற்றிலும் இந்த இனத்தை அழிக்க முடியும் என, விஞ்ஞானிகள் தெரிவித்து உள்ளனர்.

## மூன்று தினங்களுக்கு பின் மழை பெய்யும்: வானிலை அதிகாரி தகவல்

**சென்னை**: "இன்னும், மூன்று தினங்களுக்கு வறண்ட வானிலையே நிலவும்; அதன் பின் மழைக்கு வாய்ப்பு உள்ளது," என, சென்னை வானிலை ஆய்வு மைய துணை இயக்குனர், ஜெனரல் ராஜ் தெரிவித்தார்.

**வறண்ட வானிலை:**

தமிழகத்தை பொறுத்தவரை, கடந்த, இரு தினங்களாக வறண்ட வானிலையே நிலவி வருகிறது. முன்னதாக, வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, தென் தமிழகத்தில் மழை பெய்யும் என கூறப்பட்டது. ஆனால், திண்டுக்கல், நெல்லை, தேனி மாவட்டங்களில், ஒரு சில இடங்களில் மட்டுமே, மழை பெய்தது; அதன்பின் மழை இல்லை. வானிலை குறித்து, சென்னை வானிலை ஆய்வு மைய, துணை இயக்குனர், ஜெனரல் ராஜ் கூறியதாவது:

**கூடுதல் வெப்பம்:**

பகலில் வெயில் சுட்டெரித்தாலும், இரவு நேரத்தில், வானம் தெளிவாக உள்ளது. இதனால், இரவில் குளிர் நிலவி வருகிறது. சென்னையை பொறுத்தவரை, இயல்பளவைவிட, ஒரு டிகிரி செல்சியஸ் அளவிற்கு, கூடுதல் வெப்பம் நிலவுகிறது. பொதுவாக, மார்ச் மாதம் மழையை எதிர்பார்க்க முடியாது. ஏப்ரலில் கோடை மழையை ஓரளவிற்கு எதிர்பார்க்கலாம். தற்போதுள்ள சூழலில், இன்னும், மூன்று தினங்களுக்கு வறண்ட வானிலையே நிலவும். அதன் பின் மழை பெய்வதற்கான வாய்ப்பு உள்ளது. இவ்வாறு, அவர் கூறினார்.

## மேட்டூர் அணையில் 1,000 கனஅடி திறப்பு

**மேட்டூர்**: மேட்டூர் அணை நீர் திறப்பு, நேற்று, 1,000 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒகேனக்கல் மேல்பகுதி, காவிரி நீர்பிடிப்பு பகுதியில், கோடை மழை பெய்ததால், நேற்று முன்தினம், 605 கனஅடியாக இருந்த, மேட்டூர் அணையின் நீர்வரத்து, நேற்று, 1,250 கன அடியாக அதிகரித்தது. இதனால், குடிநீர் தேவைக்காக, 600 கன அடியாக இருந்த, மேட்டூர் அணை நீர் திறப்பு, நேற்று, 1,000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது. மேட்டூர் அணை நீர் இருப்பு, 17 டி.எம்.சி.,யாக இருந்தது.

## ஓராண்டுக்கு பிறகு துவங்கியது தென்மாவட்ட அணைகள் சீரமைப்பு

உலக வங்கி நிதியுதவியுடன், தமிழகத்தில் உள்ள, ஏழு அணைகளை புனரமைக்கும் பணி துவங்கி உள்ளது. தமிழகத்தில், 104 அணைகளை, 746 கோடி ரூபாய் செலவில், ஆறு ஆண்டுகளில் புனரமைக்க, முடிவு செய்யப்பட்டது.

இத்திட்டம், 2012 - 13ல் துவங்கி, 80 சதவீதம், உலக வங்கி கடன் உதவியுடன், 20 சதவீதம் மாநில அரசு பங்களிப்புடன் மேற்கொள்ள, முடிவானது. ஒவ்வொரு ஆண்டும், 17 அணைகளை சீரமைத்தால் மட்டுமே, ஆறு ஆண்டுகளில், 104 அணைகளை சீரமைக்க முடியும். கடந்த ஆண்டு, 12 அணைகளுக்கு மட்டுமே, ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்த நிறுவனத்தை தேர்ந்தெடுப்பதிலும், காலதாமதம் ஏற்பட்டது. இந்நிலையில், ஏழு அணைகளை சீரமைக்கும் பணி, ஓராண்டுக்கு பிறகு, துவங்கி உள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள, வடக்கு பச்சையாறு, அடவி நயினார், நம்பியாறு அணைகள்; கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள, பொய்கையாறு அணை; தர்மபுரி, விழுப்புரத்தில் உள்ள, நாகவதி, கோமுகி அணைகள்; வேலூர் மாவட்டத்தில் உள்ள, மோர்தானா அணையின் சீரமைப்பு துவங்கியுள்ளது. இவற்றைச் சீரமைக்கவே, 18 மாதங்கள் ஆகும். அதனால், மற்ற அணைகளை சீரமைக்க, இன்னும், பல ஆண்டுகளாகும்.

## கருமந்துறை பழ பண்ணை செடி உற்பத்தியில் சாதனை

**பெத்தநாயக்கன்பாளையம்**: ஆத்தூர் அருகே, கருமந்துறை உள்ள அரசு மாபெரும் பழப்பண்ணையில், பழ வகை மற்றும் பூச்செடிகள் அதிகளவில் உற்பத்தி செய்து, ஆசியா அளவில், இரண்டாம் இடம் பிடித்து, சாதனை படைத்துள்ளது.

ஆத்தூர் தாலுகா, பெத்தநாயக்கன்பாளையம் யூனியன், கல்வராயன்மலை, கருமந்துறையில், தோட்டக் கலைத்துறையின் கீழ், 1,037 ஏக்கர் பரப்பளவில், மாபெரும் பழப்பண்ணை, 250 ஏக்கரில் மணியார்குண்டத்தில் பழப்பண்ணை, கருமந்துறையில், 100 ஏக்கர் பழப்பண்ணை என, மொத்தம், 1,387 ஏக்கர் பரப்பளவில், பழப்பண்ணைகள் உள்ளது.

இதில், 1,037 ஏக்கர் கொண்ட மாபெரும் பழப் பண்ணையில், மா, கொய்யா, கோ-கோ, பலா, பாக்கு, மிளகு, கிராம்பூ, சப்போட்டா உள்ளிட்ட பழ வகை, ரோஜா, குண்டு மல்லிகை மலர் ரக வீரிய ரகம் மற்றும் ஒட்டு ரக செடிகள் உற்பத்தி செய்யப்படுகிறது.

செடிகள் வளர்க்கப்பட்டு, தோட்டக் கலை துறை மூலம், மானிய விலையில் வழங்குகின்றனர். கருமந்துறை அரசு மாபெரும் பழப்பண்ணையில், அதிகளவில் பழ வகை, பூச்செடிகள் உற்பத்தி செய்து, கடந்த, 2012-13ல், 75 லட்சம் ரூபாய் வருவாய் ஈட்டி சாதனை படைத்தது. 2013 -14ல், பழச்செடி, பூச்செடி என, ஆறு லட்சம் செடிகள் உற்பத்தி செய்ததில், 90 லட்சம் ரூபாய் வருவாய் ஈட்டியது. கருமந்துறை மாபெரும் பழப்பண்ணை, ஆசியா அளவில் இரண்டாம் இடமும், தமிழக அளவில் முதலிடம் பிடித்து, மீண்டும் சாதனை படைத்து, பரிசு வென்றது. 2014-15ல், லட்சம் செடிகளும், 1.30 கோடி ரூபாய் வருவாய் ஈட்ட இலக்கு நிர்ணம் செய்யப்பட்டுள்ளது.

## முருங்கை சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்

**மரக்காணம்**: மரக்காணம் ஒன்றிய விவசாயிகள் பலர் சமீப காலமாக முருங்கை சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர். மரக்காணம் பகுதியில் தண்ணீர் பற்றாக்குறை நிலவுவதால் குறைந்த தண்ணீர் செலவில் விளையும் பயிர்களை சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இந்த வகையில் மரக்காணம் ஒன்றிய விவசாயிகள் முருங்கை சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர். முருங்கை 20 ஆண்டுவரை பலன் தரும்.

குறைந்த செலவில் அதிக லாபம் பெறலாம் . நட்ட 25 நாட்களில் செடி வளர துவங்கும் . கம்பளி பூச்சி தாக்குதல் அதிகமாக இருக்கும் என்பதால் நடவு செய்த 30 நாட்களில் இருந்தே மருந்து அடிக்க வேண்டியது அவசியம். ஒவ்வொரு மாதமும் சராசரியாக 20 அடி வரை வளரும். நடவு செய்த 180 நாட்களில் அந்த மரம் காய் காய்க்க துவங்கும். இதனால் விவசாயிகள் அதிகளவில் முருங்கை சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## முட்டை விலை 270 காசாக சரிவு

**நாமக்கல்**: தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 270 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 277 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, ஏழு காசு குறைத்து, 270 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) நிலவரம்: சென்னை, 315, பெங்களூரு, 300, மைசூரு, 304, ஹைதராபாத், 280, மும்பை, 318, விஜயவாடா, 295, கோல்கத்தா, 340, பர்வாலா, 275, டில்லி, 292. இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 42 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில் நடந்த, கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை கிலோ, 58 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

## தென்னை விவசாயிகளுக்கு பயிற்சி

**உடுமலை** : உடுமலை கண்ணமநாயக்கனுாரில், தென்னை வளர்ச்சி வாரியம் மற்றும் மடத்துக்குளம் தென்னை உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு சார்பில், தென்னை விவசாயிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. கண்ணமநாயக்கனுார் செம்மணசாமி தோட்டத்தில் நடந்த பயிற்சி வகுப்பிற்கு, மடத்துக்குளம் எம்.எல்.ஏ., சண்முகவேலு தலைமை வகித்தார். தென்னை உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு தலைவர் ஜெயமணி வரவேற்றார். தென்னை வளர்ச்சி வாரிய ஆலோசகர்

பெரியநாயகம் தென்னை சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கமளித்தார். நவீன கருவி மூலம் தென்னை மரம் ஏறுதல், சாகுபடியில் நவீன தொழில்நுட்பங்கள், பூச்சி மற்றும் நோய்த்தாக்குதலை கட்டுப்படுத்தும் முறைகள், நீர் நிர்வாகம், வேர் வழி உர நிர்வாகம் மூலம் காய்ப்புத்திறனை அதிகரிப்பது குறித்து பயிற்சியாளர்கள் ராம்குமார், கணேஷ் விளக்கமளித்தனர்.

## பயறு வகைகளுக்கு தேவை அதிகரிப்பு; தொழில்நுட்பங்களை கடைப்பிடிக்க அறிவுறுத்தல்

**திண்டுக்கல்** : பயறு வகைகளுக்கான தேவை அதிகரித்திருப்பதால், அவற்றை சாகுபடி செய்துள்ள விவசாயிகள், வறட்சியை தாக்குபிடிக்கும் தொழில் நுட்பங்களை கடைபிடித்தால் நஷ்டத்தை தவிர்க்கலாம், என வேளாண்மை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வறட்சியின் காரணமாக, விவசாயிகள் வழக்கமாக சாகுபடி செய்யும் விளைபொருட்களை தவிர்த்துள்ளனர்.

தற்போது பயறு வகைகளுக்கான தேவை அதிகரித்துள்ளது. பயறு வகைகள் ஓரளவிற்கு வறட்சியை தாங்கும் என்பதால் அவற்றை சாகுபடி செய்ய விவசாயிகள் முன்வந்துள்ளனர்.உளுந்து, பாசிப்பயறு, துவரை, தட்டை பயறுக்கான சாகுபடி பரப்பளவு மாவட்டத்தில் அதிகரித்துள்ளது.

இவற்றில் அதிக வருமானம் பெறவேண்டுமென்றால் பருப்பு அளவு, 85 சதவீதம் இருக்க வேண்டும். காய்கள் நெற்றுகளாக மாறும்வரை காத்திருக்க வேண்டும். அதேப்போல் இலைகள் பழுத்து உதிர ஆரம்பிக்கும்போதுதான் அறுவடை செய்ய வேண்டும்.காப்பி கொட்டை கலரில் இருக்கும் நெற்றுகளை தனியாக பிரித்து எடுக்க வேண்டும். அவற்றை காயவைத்து, விதைகளை பிரித்து எடுத்து, சுத்தம் செய்ய வேண்டும்.

விதைகளின் ஈரப்பதம் 12 சதவீதம் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

இருப்பு வைக்க நினைக்கும் விவசாயிகள், காய்ந்த விதைகளில் ஒரு கிலோவிற்கு 5 மி.லி., நல்லெண்ணெய் தடவி, நிழலில் உலர வைத்தால் நீண்டகாலம் தாக்கு பிடிக்கும்.

இந்த நுட்பங்களை விவசாயிகள் கடைபிடித்தால், பயறுகளை அதிக விலைக்கு விற்று நஷ்டத்தை தவிர்க்கலாம் என வேளாண்மை அலுவலர்கள் ஆலோசனை அளித்துள்ளனர்.

## பூக்களின் விலை கடும் சரிவு

**நாகர்கோவில்** : தோவாளை பூ மார்க்கெட்டுக்கு குமரி மாவட்டம் மட்டுமின்றி பல்வேறு பகுதியில் இருந்தும் பூக்கள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. இது தவிர இங்கிருந்து கேரளா உள்பட தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது.

திருமணம் மற்றும் விஷேசநாட்கள் தற்போது குறைவு என்பதால் பூ விலையில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது. நேற்றய நிலவரப்படி ஒரு கிலோ மல்லிகை ரூ. ரூ.70-க்கு விற்பனை செய்யப்பட்டது.

நாகர்கோவில் பகுதியில் ஒரு கிலோ ரூ 100-க்கு விற்பனையானது. சீசன் காலங்களில் ஒரு கிலோ மல்லிகை பூ ரூ. 1000 வரை விற்பனை செய்யப்படும் என்பது குறிப்பிடதக்கது.

இதனை போன்று பிச்சிப்பூவும் கிலோ ரூ. 200-க்கு விற்பனையானது. வாடாமல்லி கிலோ ரூ. 30-க்கும், அரளி ரூ. 50-க்கும் கிரேந்தி ரூ. 25, ரோஜா ரூ.80, சம்பங்கி ரூ.25, தாமரை ஒன்று 50 காசுக்கும் விற்பனை செய்யப்பட்டது.

இது குறித்து பூ வியாபாரி ஒருவர் கூறுகையில் பங்குனி மாதம் பிறந்ததும் முகூர்த்த நாட்கள் குறைவாக உள்ளது.

இதனால் பூக்களின் தேவையும் குறைவாக இருக்கிறது. இதனால் விலை சரிவு ஏற்பட்டுள்ளது.

இனி சித்திரை மாத்திற்கு பிறகுதான் பூ விலை உயர வாய்ப்புள்ளது என்றார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### கறிக்கோழி விலை சரிவு



**கோவை:** கறிக்கோழி விலை குறைந்து வருவதால் உற்பத்தியாளர்கள் கவலையடைந்துள்ளனர். கோவை, திருப்பூர் மாவட்டத்தில் உள்ள கறிக்கோழி பண்ணைகள் மூலம் கறிக்கோழி உற்பத்தி செய்து பல்வேறு இடங்களுக்கு அனுப்பப்படுகிறது.

கறிக்கோழி பண்ணை விலை மற்றும் சில்லரை விலையை உற்பத்தியாளர்கள் தினமும் நிர்ணயித்து அறிவிக்கின்றனர். இந்த மாத தொடக்கத்தில் பண்ணை விலை உயிருடன் கோழி கிலோ ரூ.67 ஆகவும், சில்லரை விலை உயிருடன் கிலோ ரூ.89 ஆகவும், தோலுடன் கறி ரூ.125 ஆகவும், தோல் உரித்த கறி ரூ.134 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது.

இந்நிலையில், 24ம்தேதி பண்ணை விலை விலை உயிருடன் 1 கிலோ ரூ.58 ஆகவும், சில்லரை விலை உயிருடன் கிலோ ரூ.80 ஆகவும், தோலுடன் கறி ரூ.112 ஆகவும், தோல் உரித்த கறி ரூ.120 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது. பண்ணை விலை குறைவ தால் உற்பத்தியாளர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து உற்பத்தியாளர்கள் கூறுகையில், 'ஒரு கிலோ கறிக்கோழி உயிருடன் உற்பத்தி செய்ய ரூ.68 முதல் ரூ.70 வரை செலவாகிறது.

தற்போது, ஒரு கிலோ கறிக்கோழி ரூ.58க்கு விற்பதால் கிலோவுக்கு ரூ.10 நஷ்டம் ஏற்படுகிறது. ஈஸ்டர் நோன்பு காரணமாக நுகர்வு குறைவு என்பது வழக்கமானது.

இப்போது, நிலவும் கடும் கோடை வெயிலால் கறிக்கோழி நுகர்வு மேலும் குறைந்துள்ளது. இந்த ஆண்டு கேரளாவுக்கு கறிக்கோழி விற்பனை 75 சதவீதம் குறைந்தது ஆகியவை கறிக்கோழி விலை சரிவிற்கு காரணம்' என்றனர்.

**உரிகம் புளி விலை உயர்வு**



**தேன்கனிக்கோட்டை:** கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை, அஞ்செட்டி மற்றும் உரிகம் காட்டுப்பகுதியில் அதிகளவில் புளியமரங்கள் உள்ளன. இந்த வருடம் போதிய மழையில்லாததால் உரிகம் புளி விளைச்சல் குறைவாகவே உள்ளது. மரங்களில் பறித்த புளியை பொட்டு அடித்து பிரித்தெடுக்கும் பணி துவங்கியுள்ளது. பொட்டு அடித்து புளியை பிரித்தெடுக்கும் பணிக்கு போதிய கூலி ஆட்கள் கிடைக்காததால் மார்க்கெட்டுக்கு வரத்து குறைந்துள்ளது. கொட்டை நீக்கிய ஒரு கிலோ புளி ரூ.55 முதல் ரூ.60 வரை விற்பனையாகிறது. பொட்டுடன் கிலோ 20 ரூபாயாகவும், பொட்டு அடித்த புளி 23 ரூபாயாக உள்ளது.

**கத்தரி விலை குறைவால் விவசாயிகள் கவலை**

**விருத்தாசலம்**, : விருத்தாசலம் அருகே பெரியவடவாடி, சின்னவடவாடி, தொட்டிக்குப்பம், வீராரெட்டிக்குப்பம், கோபுராபுரம் உட்பட பல்வேறு கிராமங்களில் விவசாயிகள் அதிக அளவில் கத்தரி பயிர் செய்துள்ளனர். தற்போது கத்தரி பயிர் நன்கு விளைந்து அறுவடை செய்யும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் கத்தரிகாய் மார்க்கெட்டில் விலை மிக குறைவாக விற்கப்படுவதால் உரிய விலை கிடைக்காமல் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இது குறித்து விவசாயி ஒருவர் கூறியதாவது: பல்வேறு

சிரமங்களுக்கு இடையே கத்தரி பயிர் செய்து பராமரித்து வருகிறோம். தற்போது நல்ல முறையில் விளைந்து அறுவடை காலமாக உள்ளது. ஆனால் நாங்கள் எதிர்பார்த்த அளவில் விலை கிடைக்கவில்லை. இதனால் அதிக அளவில் நஷ்டம் ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. என்று வேதனையுடன் தெரிவித்தார்.

**வரத்து குறைவால் இஞ்சி விலை உயர்வு**

**சேலம்,** : சேலத்தில் வரத்து குறைவால் இஞ்சி விலை கடுமையாக உயர்ந்து, கிலோ ரூ140 வரை விற்பனை செய்யப்படுகிறது.

சேலம் மார்கெட்டிற்கு கர்நாடக மாநிலம் குடகு, கேரளா, ஊட்டி உள்ளிட்ட இடங்களில் இருந்து இஞ்சி விற்பனைக்கு வருகிறது. ஆடி மாதத்தில் புதிய இஞ்சி வரத்து அதிகமாக இருக்கும். இந்நிலையில் சீசன் இல்லாததால் கடந்த சில நாட்களாக இஞ்சி விலை தொடர்ந்து அதிகரித்து வந்தது. கடந்த மாதத்தில் ரூ3700க்கு விற்பனையான 60 கிலோ கொண்ட மூட்டை, படிப்படியாக விலை அதிகரித்து கடந்த 5 தினங்களுக்கு முன்பு ரூ4800க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்நிலையில் தற்போது இஞ்சி விலை மீண்டும் கடுமையாக உயர்ந்துள்ளது. இதன்படி ரூ4800க்கு விற்பனை செய்யப்பட்ட மூட்டை கடந்த 5 தினங்களுக்குள் வரத்து குறைவால் தற்போது ரூ5600ஆக விலை அதிகரித்துள்ளது. இதனால் சில்லறை விற்பனையில் ஒரு கிலோ இஞ்சி ரூ140 வரை விற்பனை செய்யப்படுகிறது. இது குறித்து வியாபாரிகள் கூறுகையில், 'தற்போதைக்கு இஞ்சி எங்கும் அறுவடை செய்யப்படுவதில்லை.

சேமிப்பு கிடங்குகளில் இருந்தும் மார்கெட்டிற்கு குறைவான அளவே இஞ்சி விற்பனைக்கு வருகிறது.

தற்போது இஞ்சிக்கு நல்ல விலை கிடைப்பதால் விவசாயிகள் சேமித்து வைத்துள்ள இஞ்சியை விற்பனைக்கு அனுப்பினால் மட்டுமே இஞ்சி விலை குறையும். இல்லாவிட்டால் புதிய இஞ்சிகள் வரத்து வரும் வரை இதே விலையிலோ, அல்லது விலை அதிகரித்தோ விற்பனை செய்யப்படும்' என்றனர்.

**ஓசூர் பகுதியில் கத்தரிக்காய் விலை மீண்டும் உயர்ந்தது**

**ஓசூர்**, : கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர், பாகலூர், பேரிகை மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் விவசாயிகள் காய்கறி சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இவர்களில் பலர் கத்தரிக்காய் பயிரிட்டுள்ளனர். இதனை மொத்தமாக அறுவடை செய்து தினமும் உழவர் சந்தைக்கு விற்பனைக்காக கொண்டு வருகின்றனர். இந்நிலையில், வரத்து அதிகரித்ததால் கடந்த வாரம் வரையில் கத்தரிக்காய் விலை வீழ்ச்சி அடைந்தது. கிலோ 5 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்பட்டது. இதனால், விவசாயிகள் அதிர்ச்சி அடைந்தனர். பறிக்கும் கூலிக்கு கூட விலை கட்டுப்படியாகாததால் கத்திரிக்காயை கால்நடைகளுக்கு போடும் அவல நிலை உருவாகியது. இந்நிலையில், தற்போது கத்தரிக்காய் விலை படிப்படியாக உயர்ந்து கிலோ கி20க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மிகவும் வீழ்ச்சியில் இருந்த கத்தரிக்காய் விலை தற்போது உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதுகுறித்து பேரிகையை சேர்ந்த விவசாயி புட்டண்ணா கூறியதாவது: கடந்த வாரம் வரையில் கத்தரிக்காய் விலை குறைவாக இருந்தது. இதனால், விவசாயிகள் பாதிப்பிற்குள்ளாகி வந்தனர். இந்நிலையில், தற்போது விலை உயர தொடங்கியுள்ளது. தற்போது கிலோ கி20க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஓரளவு விலை உயர்ந்துள்ளதால் விவசாயிகள் நஷ்டத்தில் இருந்து தப்பித்துள்ளனர். மேலும், விலை உயரும் என்று எதிர்பார்க்கிறோம். இவ்வாறு விவசாயி புட்டண்ணா கூறினார்.

**விளைச்சல் பாதிப்பால் வரத்து சரிவு அவரைக்காய் விலை உயர்வு கிலோ ரூ25க்கு விற்பனை**

**போச்சம்பள்ளி,** : போச்சம்பள்ளி பகுதியில் வரத்து சரிவால் அவரை விலை உயர்ந்துள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் சீசனுக்கு தகுந்தாற்போல் முள்ளங்கி, அவரை, பாகற்காய், பச்சை மிளகாய், கத்தரிக்காய், புடலங்காய், தக்காளி உள்ளிட்ட பல வகையான காய்கறிகளை விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். அவற்றை பறித்துச்சென்று போச்சம்பள்ளி, புலியூர், மத்தூர் ஆகிய பகுதிகளில் விற்பனை செய்து வருகின்றனர்.இந்நிலையில், தற்போது கோடைக்கு முன்பே கடுமையான

வெயில் கொளுத்தி வருவதால் ஏரி, கிணறு வறண்டு காணப்படுகிறது. பற்றாக்குறையால் தண்ணீரை விலைக்கு வாங்கி விளைநிலங்களுக்கு பாய்ச்சுகின்றனர். இதனால் காய்கறிகளில் மகசூல் குறைந்து வருகிறது. இதனால், வரத்து சரிந்து விலை உயர்ந்து வருகிறது. கடந்த வாரம் கிலோ 12 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட அவரை தற்போது 25 ரூபாயாக விலை உயர்ந்துள்ளது. இதேபோல், கத்தரிக்காய், தக்காளி, முள்ளங்கி, புடலங்காய் மற்றும் கீரை வகைகளின் விலையும் அதிகரித்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## அரசு கிடங்குகள் மூலம் இதுவரை 110 டன் கால்நடை தீவனம் விற்பனை

**ஈரோடு,** : ஈரோடு மாவட்டத்தில் புதியதாக திறக்கப்பட்ட உலர் தீவன கிடங்குகள் மூலமாக இதுவரை 110 டன் தீவனம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ஏற்பட்ட கடுமையான வறட்சி காரணமாக கால்நடை தீவனங்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால் கால்நடைகளுக்கு தீவனங்கள் கிடைக்காமல் விவசாயிகள் அவதிப்பட்டனர். மாவட்டத்தில் அனைத்து பகுதிகளுமே வறட்சியால் காய்ந்து போய் காணப்பட்டது. விவசாயிகளுக்கு கால்நடை தீவன பற்றாக்குறையை போக்கும் வகையில் ஈரோடு மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் உலர் தீவனகிடங்குகள் திறக்க தமிழக அரசு உத்தரவிட்டது.

அதன்படி கடந்த ஜனவரி 10ம் தேதி பவானி, பெருந்துறை, எழுமாத்தூர், பொலவக்காளிபாளையம், புன்செய்புளியம்பட்டி, நம்பியூர் ஆகிய 6 இடங்களில் உள்ள கால்நடை மருத்துவமனைகளில் உலர் தீவன கிடங்குகள் திறக்கப்பட்டது. இந்த கிடங்குகள் மூலமாக விவசாயிகளுக்கு மானிய விலையில் ஒரு கிலோ வைக்கோல் 2 ரூபாய்க்கு வழங்கப்பட்டது. ஒவ்வொரு உலர் தீவன கிடங்குகளிலும் தீவனங்கள் கொள்முதல் செய்வதற்காக தலா 10 லட்சம் ரூபாய் வீதம் 60 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு தீவனங்கள் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை விவசாயிகளுக்கு 110 டன் வைக்கோல் தீவனங்கள் மானிய விலையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மேலும் கால்நடை மருத்துவமனைகளில் வைக்கப்பட்டுள்ள உலர் தீவன கிடங்குகளில் தீ விபத்து ஏற்பட்டு வைக்கோல் எரிந்து போனால் இன்சூரன்ஸ்

பெறும் வகையில் 6 மாதத்திற்கு இன்சூரன்ஸ் பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது கோடையின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் பெரும்பாலான இடங்களில் தீவன பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது.

இந்த தீவன பற்றாக்குறையை ஈடு செய்யும் வகையில் தினசரி தீவனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் ஒதுக்கப்பட்டுள்ள நிதியை கொண்டு இன்னும் 2 மாதங்களுக்கு உலர் தீவனங்கள் கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளதாக கால்நடை பராமரிப்புத்துறையினர் தெரிவித்தனர்.

**தஞ்சை மாவட்டத்தில் உளுந்து அறுவடை மும்முரம் விலை உயர்வினால் விவசாயிகள் மகிழ்ச்சி**

**கும்பகோணம்**, : தஞ்சை மாவட்டத்தில் உளுந்து அறுவடை செய்யும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது. கடந்த ஆண்டை விட நடப்பாண்டு கிலோவுக்கு ரூ.10 கூடுதலாக கிடைத்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

காவிரி டெல்டா மாவட்டங்களில் சம்பா நெல் சாகுபடி முடிவடைந்ததும், வயலில் உள்ள ஈரப்பதத்தை கொண்டும், பம்புசெட் மூலமாகவும் உளுந்து, பயறு ஆகியவற்றை விவசாயிகள் பயிரிட்டனர்.

தைப்பட்டமாக தெளிக்கப்பட்ட உளுந்து மற்றும் பயறுகள் தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகிறது.

தஞ்சை மாவட்டத்தில் சுமார் 12ஆயிரம் ஏக்கரிலும், திருவாரூர் மாவட்டத்தில் 9 ஆயிரம் ஏக்கரிலும், நாகை மாவட்டத்தில் 8ஆயிரம் ஏக்கரிலும் உளுந்து, பயறு சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

சாகுபடி செய்யப்பட்டுள்ள உளுந்து, பயறு வகைகள் தற்போது அறுவடையில் விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் ஈடுபட்டுள்ளனர். பகல் பொழுதில் வெயில் அதிகமாக இருப்பதால் காலை நேரத்தில் அறுவடை செய்து, களத்து மேடு, சாலைகளில் காயவைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் வெண்ணாறு மற்றும் வெட்டாறு பாசனப் பகுதிகளான திட்டை, அன்னப்பன்பேட்டை, மெலட்டூர், திருக்கருக்காவூர்,

சோழன்மாளிகை, பட்டீஸ்வரம் ஆகிய பகுதிகளில் உளுந்து பயறு அறுவடை தீவிரமாக உள்ளது.

அறுவடை செய்யப்பட்ட உளுந்து மற்றும் பயரை விவசாயிகள் தனியார் வியாபாரிகளிடம் விற்று வருகின்றனர். கடந்த ஆண்டு உளுந்து கிலோ ரூ.45க்கு விற்றது. இந்த ஆண்டு ரூ.55 க்கு விற்பனையாகிறது.

அதே போல் பயறு கடந்த ஆண்டு கிலோ ரூ.55க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்த ஆண்டு ரூ.65க்கு விற்பனையாகிறது. இது குறித்து விவசாயி கக்கரை சுகுமார் கூறுகையில், நெல் சாகுபடியை தொடர்ந்து உளுந்து, பயறு சாகுபடியை விவசாயிகள் கடந்த ஆண்டை போல் பயிரிட்டனர்.

இடையில் பனி அதிகமாக இருந்ததால் செடிகளில் நோய் தாக்கம் ஏற்பட்டது. இருந்தாலும் மகசூல் பல இடங்களில் நன்றாக உள்ளது.

தனியார் வியாபாரிகள் தான் கொள்முதல் செய்கின்றனர். கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு கிலோவுக்கு ரூ10 கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**ராமநாதபுரம் மார்க்கெட்டில் குவிண்டால் ரூ.14 ஆயிரம் வரை முண்டு மிளகாய் விற்பனை**

**ராமநாதபுரம்**, : ராமநாதபுரம் மார்க்கெட்டில் முண்டு மிளகாய் குவிண் டால் ரூ.9 ஆயிரத்து 500 முதல் ரூ.14 ஆயிரம் வரை விற்பனையாகி வருகிறது. தமிழகத்திலேயே ராமநாதபுரம் மாவட்டத்தில் தான் முண்டு(குண்டு) மிளகாய் அதிகளவில் விளைவிக்கப்படுகிறது.

ராமநாதபுரம் முண்டு மிளகாய்க்கு தமிழகம், கேரளம் உட்பட சில மாநிலங்களிலும், மலேசியா, சிங்கப்பூர், இலங்கை உட்பட சில நாடுகளிலும் நல்ல வரவேற்பு உள்ளது.

இந்த மிளகாய் வேறு மாநிலங்களில் விளைவதில்லை. ராமநாதபுரத்தில இந்த ஆண்டு முண்டு மிளகாய் கடந்த பிப்ரவரி முதல் மகசூல் கிடைத்து வருகிறது. மழை இல்லாததால் போதிய விளைச்சல் இல்லை. இருந்தபோதும், பம்புசெட்டுகள், கண்மாய், ஊரணிகளில் கிடந்த சிறிதளவு தண்ணீரை ஆயின் என்ஜின்கள் மூலம் நீர் இறைத்து ஓரளவு விளைய வைத்துள்ளனர்.

விளைந்த மிளகாய் வத்தல்கள் ராமநாதபுரம், பரமக்குடி, ஆர்.எஸ்.மங்கலம் மார்க்கெட்டுக்கு கொண்டு வரப்படுகின்றன.

ராமநாதபுரத்தில் தற்போது திங்கள்கிழமைதோறும் மிளகாய் வத்தல் மார்க்கெட் நடைபெறுகிறது. நேற்று ராமநாதபுரத்தில் 10 கிலோ முண்டு மிளகாய் ரூ.950 முதல் ரூ.ஆயிரத்து 400 வரை விற்பனை செய்யப்பட்டது.

தாவது குவிண்டால் ரூ. 9 ஆயிரத்து 500 முதல் ரூ. 14 ஆயிரம் வரை விற்பனையானது. போதிய விலை இருந்தும் இந்தாண்டு விளைச்சல் குறைவு என்று விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர்.

முதுகுளத்தூர் அருகே தேரிருவேலியைச் சேர்ந்த விவசாயி ராமையா கூறுகையில், “நான் அரை ஏக்கரில் மிளகாய் பயிரிட்டேன். ரூ.27 ஆயிரம் வரை செலவழித்துள்ளேன்.

ஆனால் ரூ.7 ஆயிரத்திற்கு தான் மகசூல் கிடைத்துள்ளது“ என வருத்தத்துடன் தெரிவித்தார்.

**கால்நடைகளுக்கு தடுப்பூசி முகாம்**

**சிவகங்கை**, : மறவமங்கலம் கால்நடை மருந்தகம் சார்பில் ஆலங்குடி, சேம்பார், கீழச்சேத்தூர், சேதாம்பல், கூத்தகுடி, மாரந்தை, என்.மணக்குடி, புதுக்குளம் ஆகிய ஊர்களில் கால்நடைகளுக்கான காணை தடுப்பூசி முகாம் நடந்தது. கோடை காலங்களில் கால்நடைகளுக்கு காணை நோய் வராமல் தடுக்க மூன்று மாத கன்றுகளில் இருந்து அனைத்து மாடுகளுக்கும் தடுப்பூசி போடப்பட்டது. இம்முகாமில் சுமார் 700 மேற்பட்ட மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. கால்நடை உதவி மருத்துவர் காமு கதிரவன், ஆவின் மருத்துவர் சண்முகநாதன், ஆயாவாளர் ரூபன்ராஜ், பராமரிப்பு உதவியாளர்கள் ராமரதம், காமராஜ் ஆகியோர் மாடுகளுக்கு சிகிச்சை அளித்தனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**அடுத்த 6 ஆண்டுகளில் பால் வளத்துறை வருவாய் இரண்டு மடங்கு உயரும்**



**ஐதராபாத்,**

இந்தியாவில் பால் வளத்துறை வருவாய் வரும் 2020–ஆம் ஆண்டிற்குள் இரண்டு மடங்கு அதிகரித்து 14,000 கோடி டாலராக உயரும் என இன்வெஸ்டார் ரிலேஷன்ஸ் சொசைட்டி ஆஃப் இந்தியா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. தற்போது இத்துறையின் வருவாய் ஆண்டுக்கு சராசரியாக 15 முதல் 17 சதவீதம் வளர்ச்சி கண்டு 7,000 கோடி டாலராக (ரூ.4.30 லட்சம் கோடி) உள்ளது. நம்நாட்டில் தற்போது கிர், ஆன்கோல் மற்றும் ரெட் சிந்தி உள்ளிட்ட முப்பது வகையான உள்நாட்டு பசுக்கள் பால் உற்பத்திக்காக வளர்க்கப்படுகின்றன. இருப்பினும், ஜெர்சி மற்றும் ஹால்ஸ்டின் பெர்சியன் போன்ற வெளிநாட்டு பசுக்களையே பெரிய நிறுவனங்கள் விரும்புகின்றன. ஏனென்றால் உள்நாட்டு பசுக்களை காட்டிலும் சுமார் 1.5 முதல் 3 மடங்கு வரை அதிகம் பாலை தருகின்றன. வெளிநாட்டு பசுக்கள் நாள் ஒன்றுக்கு 25 முதல் 40 லிட்டர் பால் தருகின்றன. அதே சமயம் இந்திய பசுக்களின் வாயிலாக கிடைக்கும் பால் சராசரியாக 10 லிட்டர் என்ற அளவில்தான் உள்ளது. அதேசமயம் வெளிநாட்டு பசுக்கள் எளிதில் நோய் தாக்குதலுக்கு ஆளாகும் தன்மை உடையதாகும். இதனால் நிறுவனங்களுக்கு மருத்துவ செலவினம் அதிகரிக்கும். இருப்பினும் பெரிய நிறுவனங்கள் இவ்வகை

பசுக்களை இறக்குமதி செய்ய விரும்புகின்றன. வெளிநாடுகளில் இருந்து கால்நடைகளை இறக்குமதி செய்வதற்கான விதிமுறைகள் கடுமையாக உள்ளதால் பால் வளத்துறை வளர்ச்சிக்கு பாதிப்பு ஏற்படுகிறது என வர்த்தக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

**உக்ரைன் போர் பதற்றத்தால் கோதுமை ஏற்றுமதி அதிகரிக்க வாய்ப்பு**



**புதுடெல்லி,**

ரஷ்யா–உக்ரைன் இடையிலான போர் பதற்றத்தால் இந்தியாவின் கோதுமை ஏற்றுமதி அதிகரிக்க வாய்ப்புள்ளது என இந்திய கோதுமை வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

<u>கையிருப்பு</u>

தற்போது சர்வதேச சந்தையில் 1 டன் கோதுமை விலை 3 சதவீதம் அதிகரித்துள்ளது. மேலும் ரஷ்யா–உக்ரைன் பிரச்சினை மேலும் தீவிரமடைந்தால் விலை மேலும் அதிகரிக்கும். எனவே மத்திய அரசு கையிருப்பில் உள்ள கோதுமையை ஏற்றுமதி செய்ய அனுமதிக்க வேண்டும் ஏற்றுமதியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2013 ஆகஸ்டு முதல் 2014 ஜூன் மாதத்திற்குள் 20 லட்சம் டன் கோதுமையை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு இலக்கு நிர்ணயித்தது. இதுவரை 11 லட்சம் டன் அளவிற்கே ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

<u>உற்பத்தி</u>

நடப்பு ஆண்டில் 9.56 கோடி டன் கோதுமை உற்பத்தியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே சில லட்சம் டன் கோதுமை ஏற்றுமதி செய்ய வாய்ப்பு உள்ளது. எனவே சர்வதேச சந்தைக்கு ரஷ்ய கோதுமை வருவதற்கு முன்பே ஏற்றுமதிக்கான டெண்டர்களை விட வேண்டும் என இந்திய பருப்புகள் மற்றும் தானியங்கள் சங்கத்தின் தலைவர் பிரவின் டாங்கிரி தெரிவித்தார். இந்திய கோதுமைக்கான தேவைப்பாடு சர்வதேச சந்தையில் ஜூலை–ஆகஸ்டு வரை நீடிக்கும். இதன் பிறகு கரிபியன் நாடுகள், அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இருந்து கோதுமை வரத்து தொடங்கி விடும். வங்காள தேசம், மத்திய கிழக்கு நாடுகள், தென்கிழக்கு ஆசியன் மற்றும் ஆப்ரிக்க நாடுகளில் இருந்து இந்திய கோதுமைக்கான தேவைப்பாடு அதிகரித்துள்ளது. மத்திய பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் பயிர்கள் சேதமடைந்துள்ளதால் உற்பத்தி குறையும் என தெரிகிறது. தற்போதைய சூழ்நிலையில் கோதுமை ஏற்றுமதியை மத்திய அரசு அதிகரிக்க வாய்ப்பில்லை என நிபுணர் ஒருவர் தெரிவித்தார். மேலும் வரும் மாதங்களில் ஏற்றுமதிக்கான டெண்டர்களை வெளியிட வாய்ப்பில்லை என உணவு அமைச்சகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

**குடிநீர் தேவைக்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பு அதிகரிப்பு**



**மேட்டூர்,**

மேட்டூர் அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 500 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டு வந்தது. இது கடந்த வாரம் முதல் வினாடிக்கு 600 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது. இந்த நிலையில் குடிநீருக்கான தண்ணீர் தேவை அதிகரித்ததால், நேற்று காலை முதல் மேட்டூர் அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு வினாடிக்கு 1,000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது.

இந்த நிலையில் அணைக்கு வரும் நீரின் அளவும் அதிகரித்து உள்ளது. அதாவது, நேற்று முன்தினம் வினாடிக்கு 500 கனஅடி வீதம் வந்து கொண்டிருந்த தண்ணீர் நேற்று வினாடிக்கு 1,000 கனஅடியாக அதிகரித்தது. இதனால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் மெதுவாக குறைந்து வருகிறது. நேற்றைய நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 48.87 அடியாக இருந்தது.

## மலையடிவார பகுதிகளில் சூரியசக்தி மின்வேலி அமைக்க வேண்டும் விவசாயிகள் கோரிக்கை

**கூடலூர்,**

தேனி மாவட்டம் கூடலூர் அருகே மேற்கு மலைத் தொடர்ச்சி மலையடிவாரத் தில் உள்ள பெருமாள்கோவில் புலம், கழுதைமேடு ஆகிய பகுதிகளின் மானாவரி நிலங்களில் நிலக்கடலை, எள், தட்டைப்பயிறு, மொச்சை உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. இந்த மலைப்பகுதிகளில் உள்ள வனவிலங்குகள் மலையடி வாரத்தை ஒட்டியுள்ள விளைநிலங்களுக்குள் புகுந்து பயிர்களை சேதப்படுத்தி வந்தன. மேலும் அங்கு காவ லுக்கு இருக்கும் விவசாயி களையும் தாக்கி வந்தன. எனவே வனவிலங்குகள் வருவதை தடுக்க அகழிகள் மற்றும் சூரியசக்தி (சோலார்) மின்வேலி அமைக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர். இதையடுத்து கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்பு கழுதைமேடு, பெருமாள் கோவில்புலம் பகுதிகளில் சுமார் 2 கி.மீ. தூரத்திற்கு சூரியசக்தி மின்வேலி அமைக்கப்பட்டது. ஆனால் ஒரு வருடத்திற்குள் அந்த மின்வேலி சேதம் அடைந்தது. அதன்பிறகு அந்த மின்வேலி சீரமைக்கப்படவில்லை. இதனால் வனவிலங்குகள் மீண்டும் விளைநிலங்களுக்குள் புகுந்து பயிர்களை நாசம் செய்ய தொடங்கி உள்ளன. எனவே பயிர்களை

காப்பாற்ற விளைநிலங்களை ஒட்டியுள்ள மலையடிவார பகுதிகளில் அகழிகள் அமைக்க வேண்டும். புதிதாக சூரியசக்தி மின்வேலி அமைக்க வேண்டும். இதற்கு தேவையான நடவடிக்கை களை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எடுக்க வேண்டும் என்று அந்த பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**கோமாரிநோய் தடுப்பூசி முகாம்**



**செந்துறை,**

செந்துறை ஒன்றியம் துளார் ஊராட்சியில் உள்ள பூமுடையான்குடிக்காடு கிராமத்தில் கோமாரிநோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது . முகாமினை கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் செல்வபெருமாள் தொடங்கி வைத்தார். கால்நடை உதவி மருத்துவர் தர்மராஜ், கால்நடை பராமரிப்பு உதவியாளர் ராமலிங்கம், கால்நடை பயிற்சி ஆய்வாளர் அம்மாசிகண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். முகாமில் 338 பசு மாடு களுக்கும், 8 எருமை மாடுகளுக்கும் தடுப்பூசி போடப் பட்டது. இத்தகவலை அரியலூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் தெரிவித்துள்ளார்.